DEPOSITION OF WITNESS
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM
C.C.No.91/2021
PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | குணாநிதி |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

**BNSS** பிரிவு **348-**ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி **Date : 11.05.2026**

எதிரி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் மோகனூர், நாமக்கல் ஆகிய இடங்களில் நடைபெறும் சந்தைக்கு சென்று எனது செடிகளை விற்று வந்தேன். அப்போது எதிரி அங்கு வருவார். அந்த வகையில் பழக்கம் ஏற்பட்டது. எதிரிக்கு வழக்கு காசோலை தொகையான ரூ.7,00,000/- கொடுப்பதற்கு முன்பு எதிரியுடன் ஏதேனும் வரவு செலவு செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி ரூ.7,00,000/- கொடுப்பதற்கு முன்னர் எதிரி என்னை தொடர்பு கொண்டாரா என்றால் போனில் தொடர்பு கொண்டார். மேற்படி சங்கதிகளை நான் எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

புதன்சந்தை உதவி தோட்டக்களை அலுவலர் திரு.பெரியசாமி என்பவர் எனது நண்பர் என்றால் சரியல்ல. எனக்கு அவ்வாறு யாரையும் தெரியாது. திரு.பெரியசாமி என்பவர் எனது நண்பர் என்றாலும் நான் TNPSC தேர்வில் வெற்றிபெற சட்டவிரோதமாக பேப்பர் சேசிங் செய்ய ரூ.2,00,000/- கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. மேற்படி பெரியசாமியும் எதிரியும்தான் நண்பர்கள் என்றாலும் எதிரி என்னிடம் எந்த தொகையும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. பெரியசாமி எதிரியின் நண்பர் என்ற முறையில் எதிரி வழக்கு காசோலையை பெரியசாமிக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. என்னிடம்

காண்பிக்கப்படும் ம.சா.ஆ.1 வழக்கு காசோலையில் உள்ள விபரங்களை நான் தான் பூர்த்தி செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிதான் பூர்த்தி செய்து எடுத்து வந்தார். வழக்கு காசோலையை நான் தான் சட்டவிரோதமாக நிரப்பி எதிரி மீது மோசடியாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

வழக்கு காசோலை திருப்பப்பட்டது குறித்து எதிரிக்கு நான் நேரடியாகவோ தொலைபேசி வாயிலாகவோ கூறினேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் மூலமாகத்தான் தெரியப்படுத்தினேன். உண்மையில் நான் எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் நான் எதிரியை நேரடியாகவோ, தொலைபேசியிலோ தொடர்பு கொண்டு எதிரியிடம் பணம் கேட்டிருப்பேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கொடுத்த தொகையை வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேனா என்றால் இல்லை நான் சேமித்து வைத்திருந்த பணத்தை எடுத்து கொடுத்தேன்.

எனக்கு வருட வருமானம் ரூ.4,00,000/- என கூறியுள்ள நிலையில் எதிரிக்கு காசோலை தொகையான ரூ.7,00,000/- கொடுக்கும் அளவிற்கு போதிய வசதி இல்லை என்றால் சரியல்ல. நான் சேமித்து வைத்திருந்த பணத்தை கொடுத்தேன். எதிரி அரசு பணியில் இருப்பதால் எனது நண்பர் பெரியசாமியிடம் எதிரி கொடுத்த காசோலையை பெற்று எதிரி மீது இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எந்த ஒரு வரவு செலவும் நடக்கவில்லை என்றாலும், எதிரிக்கு அவபெயரை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் எதிரி என்னிடம் பணம் பெற்றதாக பொய்யாக கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. எதிரி 2021 முதல் 2023ம் ஆண்டுவரை சுமார் ரூ.30,000/- வரை மாத வருமானமும் தற்போது சுமார் ரூ.50,000/-க்கு மேல் மாத வருமானம் பெற்றுவரும் நிலையில் என்னிடம் பணம் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**